Individual copy

19 SEP 2019

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – இராமநாதபுரம் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான அரசு ஊழியர் திரு.கே.கந்தன் என்பவரின் மகள் செல்வி.க.ஷாலினி, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

**அரசாணை (3ப) எண். 44** — **நாள் :04.07.2019**

**விகாரி, ஆனி 19,**
**திருவள்ளுவர் ஆண்டு– 2050**

**படிக்கப்பட்டவை**

1. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை வ3/9543/2014, நாள் 04.06.2018.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் ந.க.எண்.79009/2018/டி1, நாள் 29.01.2019.

*****

**<u>ஆணை:</u>**

இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, பரமகுடி ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய திரு.கே.கந்தன் என்பவர் 16.12.1998 அன்று பணியிடை காலமானதால் அன்னாரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.க.ஷாலினி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995 மற்றும் அரசு கடிதம் எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 08.10.2007–ல் தெரிவிக்கப்பட்ட மறைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் பணி கோரி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தனியர் பொருட்டு தளர்த்தி செல்வி.க.ஷாலினி என்பவருக்குப் பணிநியமனம் வழங்கக் கல்வி மற்றும் இதர தகுதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்க இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரை அறிவுறுத்துமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரை அறிவுறுத்தி அரசாணை(4ப) எண்.25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ3) துறை, நாள் 04.05.2018ல் ஆணையிடப்பட்டது. மேற்காண் அரசாணையின்படி செல்வி.க.ஷாலினி என்பவருக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 05.06.2018 முற்பகல் முதல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறாள். அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் செல்வி.க.ஷாலினி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 11.08.2014 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த

தேதி 21.09.1994 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 04 என்றும், பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 19 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 23 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.க.ஷாலினி என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 05.06.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 22.03.2019 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.3668/க்யூ–1/2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.10154/ஜி2/2019, நாள் 03.05.2019–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

நகல் சார்பு செய்யப்படுகிறது
ந.க.அ3/9543/14, நாள்: 9.19

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், இராமநாதபுரம்.

நகல்:
செல்வி.க.ஷாலினி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம்.
(வழி: இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை , சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.